தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## 31.08.2013

### கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை

கூடுதல் விலைக்கு உரங்களை விற்போர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன் தெரிவித்தார்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆட்சியர் மு.கருணாகரன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

இதில், உரக்கடைகளில் உரங்களை கூடுதல் விலைக்கு விற்பதைத் தடுக்கவும், தொண்டாமுத்தூர், நரசிபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் நிலவும் மயில்கள் தொல்லையைக் கட்டுப்படுத்தவும் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

இதற்கு, ஆட்சியர் மு.கருணாகரன் பதிலளித்துப் பேசியது:

உரக்கடைகளில் உரங்களுக்கு கூடுதல் விலை வைத்து விற்பனை செய்யக் கூடாது. மேலும், கடைகளில் உரங்களின் விலைப் பட்டியலை வைத்திருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரக்கடைகளில் கண்காணிப்பு செய்து, கூடுதல் விலைக்கு விற்பதைத் தடுக்க வேண்டும். நியாயமான விலையில் உரங்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். உரங்களை வாங்கும் விவசாயிகளுக்கு கண்டிப்பாக ரசீது தர வேண்டும். கூடுதல் விலைக்கு உரங்களை விற்போர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 83.51 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 83.51 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,650 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,869 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 17.62 டி.எம்.சி

**ஆம்பூரில் அதிக மழை**

வேலூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை இரவு முதல் விடியவிடிய பெய்த மழையால் வெள்ளிக்கிழமை வெப்பம் தணிந்து காணப்பட்டது.

வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. வேலூர் மாவட்டத்திலும் கடந்த 3 நாள்களாக மழை தொடர்கிறது. வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் ஆம்பூரில் அதிக அளவாக 90.8 மி.மீ. மழை பதிவானது.

பிற இடங்களில் பதிவான மழை அளவு (மி.மீட்டரில்):

வேலூர் 55, ஆற்காடு 72, குடியாத்தம் 51.3, மேல்ஆலத்தூர் 40.6, வாணியம்பாடி 23, ஆலங்காயம் 80.5, திருப்பத்தூர் 9, வாலாஜாபேட்டை 24, சோளிங்கர் 16, அரக்கோணம் 4, காவேரிப்பாக்கம் 13, பொன்னை 44.6.

**சேலத்தில் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

சேலம் - உளுந்தூர்பேட்டை வரையிலான தேசிய நெடுஞ்சாலைப் பணிக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு முழுமையான இழப்பீடு வழங்கக் கோரி சேலத்தில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சேலம் ஆட்சியர் அலுவலகம் அருகே அகில இந்திய விவசாயிகள் மகா சபை சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அந்தச் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் வி.அய்யந்துரை தலைமை வகித்தார்.

சேலம் - உளுந்தூர்பேட்டை வரையிலான தேசிய நெடுஞ்சாலைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு முழுமையான இழப்பீடு வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்காமல் சுங்கவரி வசூல்

செய்யக் கூடாது என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் போது வி.அய்யந்துரை கூறியது:

கடந்த 2009-இல் தொடங்கப்பட்ட சேலம் - உளுந்தூர்பேட்டை சாலை விரிவாக்கப் பணி இதுவரையிலும் முழுமையாக முடிக்கப்படவில்லை. எருமாபாளையம் - புத்திரகவுண்டம்பாளையம் வரை பணிகள் நிறைவடையாமல் உள்ளன.

நிலங்களை இழந்தவர்களுக்கு குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகை கூட முழுமையாக இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத் திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அனுமதி அறிக்கையைப் பெறாமலே சட்ட விரோதமாக தனியார் நிறுவனத்தால் சாலை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டப் பணிகளில் பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகள் உள்ளன.

நிலங்களை இழந்த மக்களுக்கு சமச்சீரற்ற முறையில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகவும், சமச்சீரான இழப்பீடும், சந்தை மதிப்பீட்டின் அடிப்படையிலான உயர் மதிப்பீட்டை வழங்கக் கோரி சட்டரீதியிலாக நாங்கள் போராடி வருகிறோம்.

மாவட்ட ஆட்சியரிடம் நாங்கள் வழங்கிய ஆர்பிட்ரேசன் மனுக்கள் மீது இதுவரை நடவடிக்கை இல்லை. இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தும்கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகள் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், வருகிற செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் சேலம் மாவட்டம், மேட்டுப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள சுங்கச்சாவடியில் சாலையைக் கட்டமைத்த தனியார் நிறுவனத்தினர் சுங்கக் கட்டணம் வசூல் செய்ய உள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்தக் செயல் நிலம் இழந்த விவசாயிகளை வஞ்சிப்பதாகும் என்றார் அவர்.

ஆர்ப்பாட்டத்தில், ஏ.ஐ.சி.சி.டி.யூ. அமைப்பின் மாநில துணைத் தலைவர் சந்திரமோகன், மார்க்சிஸ்ட் லெனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கோ.மோகனசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வறட்சி நிவாரணம் பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்படும்**

திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் பேசியது:

திருச்சி மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில் வறட்சி நிவாரணமாக இதுவரை ரூ. 23.8 கோடி வழங்கப்பட்டுள்ளது. டெல்டா அல்லாத பகுதிகளில் ரூ. 17.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நிவாரணத் தொகை பெற்றவர்களின் பெயர் பட்டியல் அந்தந்த கூட்டுறவு வங்கிகளின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படும். மத்திய கூட்டுறவு வங்கியில் மாதந்தோறும் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டங்களை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவு வங்கிகள் மூலம் ஆழ்குழாய் கிணறு அமைக்க மானியத்துடன் கடன் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதவத்தூர்- கொய்யாத்தோப்பு சாலை செப்டம்பர் 15-ம் தேதிக்குள் செப்பனிடப்படும். புள்ளம்பாடி- செங்கரையூர் சாலை 50 செமீ உயர்த்தி அமைக்கப்படும்.

விவசாயத்துக்காக மாவட்டத்திலுள்ள 17 கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் திறக்கவும், கடைமடைப் பகுதிகள் வரை தட்டுப்பாடின்றி தண்ணீர் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

காவிரியிலும், காட்டாறுகளிலும் சிறு தடுப்பணைகள் கட்ட பொதுப்பணித் துறையிடம் மாதிரி திட்ட அறிக்கைகள் பெறப்பட்டு அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

கள்ளிக்குடி- புங்கனூர் பகுதிகளில் உள்ள 30-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாக உள்ள அப்பகுதி ஏரி தூர்வாரப்படும். பிள்ளையார்குட்டை பாசன வாய்க்கால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

மாதத்துக்கு ஒரு வட்டத்துக்கு ஒரு ஏரியைத் தூர்வாரி ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்த் துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் ஜெயஸ்ரீ.

**ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாம்**

கரூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கிய குடற்புழு நீக்க சிகிச்சை முகாமின் முதல் நாள் மட்டும் 19,380 ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

நன்னியூர் ஊராட்சியைச் சேர்ந்த செவ்வந்திபாளையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குடற்புழு நீக்க சிகிச்சை முகாமைத் தொடக்கி வைத்து, பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கால்நடைகள் ஆய்வுப் பணியைத் தொடக்கி வைத்தும், அவர் பேசியது:

பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆடுகள், மாடுகளைப் பராமரிக்க கொட்டகை அமைத்து கொடுப்பதற்கும், தீவனம் வாங்குவதற்கும் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பால் உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கிறது.

அரசால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள், மாடுகள் சுகாதாரமான முறையில், ஆரோக்கியமாக வளர வேண்டும் என்பதற்காக கால்நடை மருத்துவர்கள் மூலம் ஒவ்வொரு மாதமும் பயனாளியின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று பரிசோதனை செய்யப்பட்டு வருவதுடன், 3 மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு மற்றும் சிகிச்சை நடத்தப்பட்டு வருகிறது.

முகாமில் ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்களது ஆடுகளை முகாமுக்கு அழைத்து வந்து மருந்தைப் பெற்றுச் செல்ல வேண்டும். இந்த மருந்து ஆடுகளுக்கு வழங்கப்படுவதால் எவ்வித நோய் தாக்குதலும் வராது. மேலும் ஆடுகளின் வளர்ச்சித்திறனும் அதிகரிக்கும், எனவே தங்கள் பகுதியில் நடைபெறும் கால்நடை சிறப்பு மருத்துவ முகாமை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி. கால்நடை சிறப்பு மருத்துவர்கள் குல்கர்பர்வீன், சேகர் உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்றனர்.

**நிலக்கடலை பயிருக்கு 50% மானியத்தில் ஜிப்சம்**

நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் 50 சதவீத மானிய விலையில் விநியோகிக்கப்படுவதாக புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் தெரிவித்துள்ளார்.

குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற எண்ணெய்வித்து உற்பத்தித் திட்ட விவசாயிகள் பயிற்சி முகாமை

தொடக்கி வைத்து மேலும் அவர் பேசியது:

விவசாயிகள் எண்ணெய்வித்து சாகுபடி தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சாகுபடி செய்து கூடுதல் மகசூலும், லாபமும் பெறலாம்.

நிலக்கடலையில் அதிக மகசூல் பெற ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும் என்றார்.

இதையடுத்து, பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் எஸ். ராஜசேகரன், நிலக்கடலையில் விதை நேர்த்தி முறைகள்

குறித்தும், புதுக்கோட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன் வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில

அரசு திட்டங்கள் குறித்தும் பேசினர்.

இப்பயிற்சியில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய

கல்லூரி மாணவிகள் பங்கேற்று விவசாயிகளிடம் கலந்துரையாடினர்.

இதில் வேளாண் அலுவலர்கள் எல். அண்ணாமலை, ஸ்பிக் உர நிறுவன விற்பனை அலுவலர் சுதாகர் மற்றும் வட்டார உதவி வேளாண் அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"விவசாயிகளின் நிலை குறித்து பல்கலை.கள் விவாதிப்பது அவசியம்'தஞ்சாவூர்**

விவசாயிகளின் நிலை குறித்து பல்கலைக்கழகங்கள் விவாதம் நடத்துவது அவசியம் என்றார் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழக வேந்தரும், திராவிடர் கழகத் தலைவருமான கி. வீரமணி.

இந்தப் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரு நாள் வேளாண் தொழில்நுட்பத் திருவிழா, தேசிய வேளாண் தொழில்நுட்பக் கருத்தரங்கம், கருத்துக்காட்சி தொடக்க விழாவில் அவர் மேலும் பேசியது:

கல்லூரிகள் கூழாங் கற்களை ஒளிரச் செய்கின்றன  ஆனால், வைரக் கற்களை மழுங்கடிக்கச் செய்கின்றன என அறிஞர் இங்கர்சால் குறிப்பிட்டுள்ளார். பகுத்தறிவு, பட்டறிவு, சுதந்திர சிந்தனை போன்றவற்றை கல்லூரிகளில் ஊக்கப்படுத்தப்படுவதில்லை. ஒரு வரையறை எல்லைக்குள் உள்படுத்தப்பட்டு வைக்கப்படுகின்றனர்.

அறிவில் சிறந்து விளங்குபவர்களுக்குக் காலம் தாழ்ந்துதான் அங்கீகாரம் கிடைக்கிறது. அவர்களை அங்கீகரிக்காமல் போனால்

அதனால் சமூகத்துக்குத்தான் நட்டம்.

விவசாயிகளின் நிலை குறித்து பல்கலைக்கழகங்கள் விவாதிக்க வேண்டும். விவசாயிகள் விளைவிக்கும் விளைபொருள்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பு அளித்தால் நடப்புக் கணக்கில் பற்றாக்குறை ஏற்பட வேண்டிய அவசியம் இருக்காது. ரூபாய் மதிப்பும் வீழ்ச்சி அடையாது என்றார் வீரமணி.

பத்மஸ்ரீ விருது பெற்ற முதல் தோட்டக்கலை வல்லுநர் புதுச்சேரி த. வெங்கடபதி ரெட்டியார் பேசியது:

உலகம் ஒரு சுரங்கம். அதில், எதையாவது தேடிக் கொண்டிருந்தால் நிச்சயமாக முன்னேற்ற மடையலாம். சோம்பேறியாக இருந்துவிடக் கூடாது.

கனகாம்பர செடியில் புதிய வகையைக் கண்டறிந்தேன். இதற்கு தென்னந்தியாவில் மிகப் பெரிய வரவேற்பு கிடைத்து ரூ. 40 கோடிக்கு விற்று முதல் செய்யப்பட்டது.

மேலும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னிய செலாவணியும் ஈட்டுத் தர முடிந்தது என்றார் வெங்கடபதி.

நபார்டு வங்கிப் பொது மேலாளர் ச. நடராசன் பேசியது:

நபார்டு வங்கி விவசாயிகளுடன் ஒன்றிணைந்த வங்கி. நம் நாட்டில் விவசாயிகளில் 80 சதவீதம் பேர் குறு, சிறு விவசாயிகள். இவர்கள் நன்றாக இருந்தால்தான் நாடு

முன்னேற்றமடையும். அவர்களை மேம்படுத்தும் வகையில் நபார்டு வங்கி செயல்படுகிறது என்றார்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கிப் பொது மேலாளர் ராசேந்திரகுமார் குப்தா பேசியது: டெல்டா மாவட்டங்களில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன்னோடி வங்கியாகத் திகழ்கிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு விவசாயத்துக்கு ரூ. 721 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதையும் தாண்டி ரூ. 723.63 கோடி வழங்கப்பட்டது. நிகழாண்டில் விவசாயத்துக்கு

ரூ. 934 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

காவிரி டெல்டா வளர்ச்சி மையத் தலைவர் மன்னார்குடி எஸ். ரங்கநாதன், மாநில திட்டக்குழு முன்னாள் உறுப்பினர் ஜி. சிதம்பரம், பல்கலைக்கழகத் துணைவேந்தர் நல். ராமச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 113.10 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 113.10 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 6,779 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 17,994 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரியில் 5,000 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 8,011 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,704 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 1,000 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**களைக்கொல்லி தரத்தை ஆய்வுசெய்ய வேண்டும்**

மகசூல் இழப்பைத் தவிர்க்க களைக்கொல்லிகளின் தரத்தை ஆய்வுக்கு உள்படுத்த வேண்டும் என நாகை மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தினர்.

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியாமரியம், வேளாண் இணை இயக்குநர் உ. ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

வி. தனபாலன்: வெளிச் சந்தையில் ஒரு கிலோ விதைநெல் ரூ. 32-க்கு கிடைக்கும் நிலையில், ரூ. 45 கொடுத்து கொள்முதல் செய்துள்ளது கூட்டுறவு விற்பனை இணையம். இதற்காக அரசு மானியமாக ஒரு கிலோவுக்கு ரூ. 22.50 வரை பெறப்பட்டுள்ளது. இதில் விதி மீறப்பட்டு, சுமார் ரூ. 10 கோடி முறைகேடு நடைபெற்றுள்ளதாகத் தெரிகிறது. இந்த முறைகேடு குறித்து விசாரணைக்குப் பரிந்துரைக்க வேண்டும். பல புதிய களைக்கொல்லிகள் தற்போது வெளிச் சந்தைக்கு வந்துள்ளன. அவை தெளிக்கப்பட்ட பல வயல்களில் நெல் பயிர்களின் நிறம் சிவந்தும், நாற்றுகள் கருகியும் உள்ளன. எனவே, களைக்கொல்லிகளின் தரத்தை ஆய்வுக்கு உள்படுத்த வேண்டும்.

கோதண்டராமன்: கொள்ளிடம் புதுமண்ணியாறு பாசனப் பகுதியில், கடந்த 5 ஆண்டுகளாக பொறை வாய்க்கால், கழுமலை ஆறு மூலம் காவிரி பாசனம் கிடைக்காத நிலை உள்ளது. இதனால், சுமார் 38 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன.

கே.எஸ். பாபு: வேளாண் விரிவாக்க மையங்களில் விதை மானியத் தொகைக்கு ஈடாக நுண்ணுயிர் உரங்களை பெறுமாறு விவசாயிகளை வற்புறுத்தும் நடவடிக்கைளைத் தடுக்க வேண்டும்.

குரு. கோபிகணேசன்: மேட்டூரிலிருந்து திறக்கப்படும் 18 ஆயிரம் கன அடி தண்ணீரில் 13 ஆயிரம் கன அடி மட்டுமே கல்லணையை வந்தடைகிறது. தண்ணீர் திருட்டில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுப்பதுடன், மேட்டூரிலிருந்து 23 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்க வேண்டும்.

ஏ. அலெக்ஸாண்டர்: தலைஞாயிறு என்.பி.கே.ஆர்.ஆர் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்கு சுமார் ரூ. 30 கோடி நிலுவையுள்ளது. இந்த நிலையில்,

புதிய பயிர்க் கடன் கிடையாது என கூட்டுறவு வங்கிகளில் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எஸ். சம்பந்தம் : ஜூலைக்குள் டீசல் மானியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், ஆகஸ்ட் மாதம் முடிந்த நிலையிலும் வழங்கப்படவில்லை.

மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி: டீசல் மானியம் வரும் ஒரு வார காலத்துக்குள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். நிகழாண்டில் இயல்பு பரப்பைவிட கூடுதலான பரப்பில் சம்பா சாகுபடி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயப் பணிகளின் தேவைகளை விரைவாக நிறைவு செய்ய மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது என்றார்.

**இன்று கால்நடைகள்  மருத்துவ முகாம்**

திருவள்ளூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் சனிக்கிழமை (ஆக.31) நடைபெறவுள்ளது.

இம்மாவட்டத்தில் வழங்கப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் ஆடுகளின் பால் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், உடல் எடையினை அதிகரிக்கவும் மாவட்டம் முழுவதும் இம்முகாம் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் பயனாளிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிவகாசியில் 119.6 மி.மீ. மழை**

சிவகாசியில் வியாழக்கிழமை மாலை முதல் இரவு வரை 119.6. மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. அதே நாள் சாத்தூரில் 10 மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூரில் 63 மி.மீ., பிளவக்கல் அணையில் 50மி.மீ., வத்திராயிருப்பில் 12 மி.மீ., ராஜபாளையத்தில் 30. மி.மீ. மழை பெய்துள்ளது.

சிவகாசியில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்ட நிலையில், தற்போது பெய்துள்ள மழை, பொதுமக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**அபிராமத்தில் பலத்த மழை**

கமுதி அருகே அபிராமத்தில் வெள்ளிக்கிழமை மாலை திடீரென்று, சுமார் 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

ரோடுகளில் மழை நீர் தேங்கி பொது மக்களுக்கு பெரும் இடையூறு ஏற்படுத்தியது. பேரூராட்சி செயல் அலுவலர் ரா.ராஜாராம் துப்புரவு ஊழியர்களை அழைத்துச் சென்று தெருக்களில் தேங்கி இருந்த மழை நீரை அகற்றச் செய்தார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**31.08.2013**

## வறட்சியால் பசுந்தேயிலை மகசூல் குறைவு

கோத்தகிரி:கோத்தகிரியில் வறட்சி காரணமாக, பசுந்தேயிலை மகசூல் படிப்படியாக குறைந்துவருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில், நடப் பாண்டு பருவமழை பொய்த்து விட்டது. மாவட்டத்தின் இதர பகுதியில் ஓரளவு மழைப் பெய்து, நிலம் ஈரம் கண்டுள்ள நிலையில், கோத்தகிரி பகுதியில் விவசாய நிலங்கள் வறண்டுக் காணப்படுகிறது.இதனால், தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல் நான்கு மடங்காக குறைந்துள்ளது.கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக, பசுந்தேயிலைக்கு, 18 ரூபாய்க்கும் குறையாமல் விலை கிடைத்துவரும் நிலையில், தற்போது மகசூல் குறைந்துள்ளதால், விவசாயிகளுக்கு வருவாய் வெகுவாக குறைந்துள்ளது.தொழிலாளர்களுக்கு போதுமான அளவு வேலை இல்லாத நிலையில், பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ளதால், அன்றாட தேவைக்காக திணறி வருகின்றனர்.தோட்டங்களை உரமிட்டு பராமரிக்க, விவசாயிகள் கடன்பெற்று தனியாரிடம் உரம் வாங்கி இருந்தனர். உரமிடுவதற்கு ஏதுவாகன காலநிலை இல்லாததால், விவசாயிகளால் உரமிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.வறட்சி தொடர்ந்து நீடிப்பதால், பல பகுதிகளில் தேயிலை செடியில் உள்ள இலைகள் உதிர்ந்து வருகிறது. இவ்வாறு, பாதிக்கப்பட்ட தேயிலை தோட்டங்களில் அரும்புகள் துளிர்விட்டு, மீண்டும் பழைய நிலையை அடைய, மழை தேவைப்படுகிறது. மழை பெய்யாத பட்சத்தில், விவசாயிகள் மேலும் வருவாயை இழக்க நேரிடும் அபாயம் உள்ளது.இது ஒருப்புறம் இருக்க, நீர்

ஆதாரமுள்ள ஓடை, குளங்கள் வற்றியுள்ளதால், எஞ்சிய நிலப்பரப்பில், மேற்கொண்டுள்ள காய்கறி சாகுபடியும் பாதிக்கப்பட்டுள்ளது.

## புதிய பயிர்க்கடன் வேணும் :திருச்சி குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்

திருச்சி: "விவசாயிகளுக்கு புதிய பயிர்க்கடன் வழங்க வேண்டும்' என, திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று காலை நடந்தது. இதில், கலெக்டர் ஜெயஸ்ரீ, வேளாண்துறை இணை இயக்குனர் குருராஜ் சிங், கூட்டுறவுத்துறை இணை இயக்குனர் ராஜேந்திரபிரசாத், மத்திய கூட்டுறவு வங்கி சிறப்பு அலுவலர் மிருணாளினி, மின்வாரிய செயற்பொறியாளர் (பொறுப்பு) அருள்மொழி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட, பல அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும், விவசாயிகளும் பங்கேற்று, தங்களின் பிரச்னை குறித்து கலெக்டரிடம் மனு அளித்தனர். குறைதீர் கூட்டத்தில் விவசாய சங்க பிரதிநிதிகள் பேசியதாவது:

பாரதீய கிசான் சங்க மாநில துணைத்தலைவர் அய்யாக்கண்ணு: விவசாயிகள் வாங்கிய கடனுக்கு ஜப்தி என்ற பெயரில், தினமும் பேப்பரில் விளம்பரம் வருகிறது. அரசு விவசாயிகளின் கடன் வசூலை ஒராண்டு தள்ளிவைக்க உத்தரவிட்டுள்ளது. ஆகையால் இதுபோன்ற விளம்பரங்களை தடுத்து நிறுத்த வேண்டும். விவசாயிகளுக்கு புதிய கடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆதிதிராவிட மாணவர்களிடம் கல்லூரிகள் மிரட்டி கட்டணம் வசூலிப்பதை தடுத்து நிறுத்தவேண்டும்.

குறைந்த விலைக்கு விளைபொருட்களை வாங்கி, அதிக விலைக்கு உணவுப்பொருட்களை விற்கும் ஹோட்டல்கள் மீது நடவடிக்கை எடுத்து, உணவுப்பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அய்யன் வாய்க்கால் பாசனதாரர் சங்க ஒருங்கிணைப்பாளர் வீரசேகரன்: விவசாயத்தை பாதுகாக்கும் வகையில், நிலத்தடி நீர்மட்டம உயர தகுந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும். காவிரி நீர் கடலில் வீணாவதை தடுக்கும்

வகையில், 17 பிரதான கால்வாய்களிலும் ஆய்வு செய்து, தேவையான மதகுகளை பராமரிப்பதோடு, தேவையற்ற, பழுதடைந்த மதகுகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும்.

காங்கிரஸ் விவசாய பிரிவு மாநில துணைத்தலைவர் நாகராஜன்: கர்நாடகாவில் காவிரியின் குறுக்கே நீர்மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க, அம்மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை, காவிரி இறுதி தீர்ப்புக்கு எதிரானது. தமிழக விவசாயிகளின் பாசன உரிமைக்கு எதிரானது. ஆகையால் இம்முயற்சியை தமிழக முதல்வர் நீதிமன்றம் மூலம் தடுத்து நிறுத்த வேண்டும். கட்டளை, உய்யகொண்டான் ஆற்றில் கூடுதலாக தண்ணீர் திறந்து, கடைமடை பகுதி வரை பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்க ஆவண செய்யவேண்டும். விதைநெல் சரியான விலைக்கு கிடைக்க முதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சிவசூரியன்: கடந்த ஆண்டு வறட்சியால் விவசாயிகள் நஷ்மடைந்தனர். இந்த ஆண்டு காவிரியில் தண்ணீர் கரைபுரண்டு ஓடியும், விவசாயத்துக்கு பணம் இல்லை என்பதால், அவர்கள் தவித்து வருகின்றனர். ஆகையால் விவசாயிகளின் வாழ்வாதரத்தை காக்கும் வகையில், புதிய பயிர்க்கடன்கள் வழங்கவேண்டும். பழைய பயிர்க்கடன்களை ரத்து செய்யவேண்டும்.

காங்கிரஸ் விவசாய பிரிவு மாவட்ட தலைவர் முரளிதரன்: திருச்சி மாநகராட்சியின், 38வது வார்டில் உள்ள பல கிராமங்களில் உழவர் பாதுகாப்பு அட்டை இவரை வழங்கப்படவில்லை. உடனடியாக வழங்க கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயிகளை அலைகழிக்காமல் வறட்சி நிவாரணம் வழங்கவேண்டும்.

தமிழக விவசாயிகள் சங்க நிர்வாகி ராஜா சிதம்பரம்: வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை, மா, எலுமிச்சை ஆகிய பயிர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும். அதேபோல் பதிவுத்திருமணங்களை, அந்தந்த மாவட்டங்களில் மட்டும் நடத்த ஆவண செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர்கள் பேசினர்.

## விலையில்லா ஆடு, மாடுக்கு இலவச மருத்துவ முகாம்

கரூர்: விலையில்லா ஆடு, மாடுகளுக்கு இலவச மருத்துவ முகாம், செவ்வந்திபாயைத்தில் நடத்தது.

கால்நடைபராமரிப்பு துறை சார்பில், கரூர் மாவட்டம் நன்னியூர் பஞ்சாயத்து செவ்வந்திபாளையத்தில் விலையில்லா ஆடுகளுக்கு ஆய்வு மற்றும் குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் நடந்தது. இதை, கலெக்டர் ஜெயந்தி துவக்கிவைத்தார். விலையில்லா ஆடு மற்றும் மாடுகளை பராமாரிக்க கொட்டகை அமைத்துக் கொடுக்க, தீவனம் வாங்குவதற்கும் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த கால்நடைகளை சுகாதாரமான முறையில் ஆரோக்கியமாக வளரவேண்டும் என்தற்காக, கால்நடை மாருத்துவமனை டாக்டர் மூலம் ஒவ்வொரு மாதமும் பயனாளிகளின் வீட்டிக்கு நேரடியாக சென்று பரிசோனை செய்யப்படுகிறது.முகாமில் கால்நடை பராமாரிப்புத்துறை உதவி இயக்குநர் குழந்தைசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## 500 ஏக்கரில் கோ 4 ரக புல் கரூர் கலெக்டர் தகவல்

கரூர்: ""நடப்பாண்டு கோ, 4 ரக புல், 500 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது," என்று, கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

கரூர் மாவட்டம் குளித்தலை தாலுகாக்களில் கால்நடைத்துறை மூலம் கோ4 ரக புல் பயிரிடப்பட்டுள்ள பகுதிகளை கரூர் கலெக்டர் ஜெயந்தி பார்வையிட்டார். பின் அவர் கூறியதாவது:

பால் உற்பத்தியையும் அதிகரித்து வெண்ணெய் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடன் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் பால் உற்பத்திக்கு தேவையான உதவிகளை முழு மானியத்துடன் வழங்கப்படுகிறது.

பால் உற்பத்தி அதிகரிக்கும் நோக்கில் ஓர் ஏக்கர் பரப்பளவில், கோ-4 ரகபுல் பயிரிட தமிழக அரசு மாநில தீவன புல் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முழுமானியம் 12ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறது.இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

இதன் மூலம் கடந்த, 2011-12ம் ஆண்டில் கரூர் மாவட்டத்தில், 220 ஏக்கரில் கரூர், குளித்தலை தாலுகாவில் கோ, 4 ரக புல் பயிரிட்டு அரசு மானியம் பெற்றனர். இதனால் பால் உற்பத்தியும் அதிகரித்து லாபம் பெற்றனர்.

தற்போது, 2012-13ம் ஆண்டுக்கு கரூர், குளித்தலை தாலுகாவில், 500 ஏக்கரில் கோ- 4 ரக புல் பயிரிடப்பட்டுள்ளது. வறட்சி நிலையையும் சமாளித்து பால் உற்பத்தியில் இந்தாண்டு, 56ஆயிரம் லிட்டர் வரை கொள்முதல் செய்து வெண்மை புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர்.

## நடமாடும் மண்பரிசோதனை வாகனம் கரூர் கலெக்டர் துவக்கிவைப்பு

கரூர்: நடமாடு மண்பரிசோதனை ஆய்வு வாகனத்தை கலெக்டர் ஜெயந்தி துவக்கி வைத்தார்.

வேளாண்மைத்துறையின் மூலம் நடமாடும் மண்பரிசோதனை ஆய்வு வாகன துவக்க விழா கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இதில், கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்தார்.

கரூர் மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 40 ஆயிரம் விவசாய நிலங்களில் மண்மாதிரி எடுத்து அதை ஆய்வு செய்து ஒருங்கிணைந்த கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 40 லட்சம் ரூபாய் மதிப்பில் நடமாடும் ஆய்வு கூடத்தில் மண்ணின் சத்துக்கள் ஆய்வு, உப்பின் நிலையை கண்டறிதல், அமில நிலையினை கண்டறிய வசதியாக, ஐந்து உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவைதவிர, மண்ணின் சுண்ணாம்புநிலை, தழைச்சத்துகளை ஆய்வும் செய்யப்பட உள்ளது. எனவே நடமாடும் மண்பரிசோதனை ஆய்வு கூடம் கிராமங்களுக்கு நேரடியாக சென்று விவசாயிகளின் மண்மாதிரிகளை ஆய்வு செய்து உடனடியாக மண்மாதிரி அறிக்கையை அளிக்க முடியும்.

மேலும் ஆர்வமுள்ள விவசாய பெருமக்கள் ராயனூரில் உள்ள மண்பரிசோதனை நிலைய அலுவலரின், 9787274211 என்ற மொபைல்ஃபோன் எண்ணை, அல்லது வெண்ணெய்மலையில் உள்ள நடமாடும் மண்பரிசோதனை நிலைய அலுவலரின், 97913 76728 என்ற மொபைல்ஃபோன் எண்ணை தொடர்பு கொள்ளலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் தெய்வேந்திரன், துணை இயக்குநர்

சிவானந்தம், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜேந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

### விளைநிலங்களை பாதுகாக்க முயற்சி காம்பளக்ஸ் உரம் இறக்குமதி

திண்டுக்கல் : இருக்கும் தண்ணீரை வைத்து விளைநிலங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கை வேளாண்மை துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான காம்ப்ளக்ஸ் உரம் ஆயிரத்து 115 டன், இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, சரக்கு ரயில்மூலம் திண்டுக்கல்லுக்கு கொண்டுவரப்பட்டது.

தென்மேற்கு பருவமழை மாவட்டத்தில் இம்மாதம் 328 மி.மீ., அளவிற்கு பெய்திருக்க வேண்டும்.

ஆனால் இதுவரை 16 மி.மீ., மட்டுமே பெய்துள்ளது. சராசரியாக 20 மி.மீ., மழை பெய்தால்தான் ஓரளவிற்கு மழை பெய்திருப்பதாக பதிவு செய்ய முடியும். ஆனால், இதுவரை குறைந்த அளவில்கூட மழை பெய்யாதது விவசாயிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாவட்டத்தில் உள்ள 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் மக்காச்சோளம் பயிரிடுவதற்கான முயற்சிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

செப்டம்பர் இறுதிவரை தென் மேற்கு பருவமழை மீது நம்பிக்கை வைத்தும், அடுத்து வடகிழக்கு பருவமழை துவங்கும் என்ற எதிர்பார்ப்பிலும் விளைநிலங்களை பாதுகாக்குமாறு அறிவுறுத்தியுள்ள வேளாண்துறையினர் அதற்கு தேவையான காம்ப்ளக்ஸ் உர மூடைகளை இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்துள்ளனர்.

இந்தியா பொட்டாஷ் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் ஆந்திராவில் உள்ள கிருஷ்ணபட்டினம் துறைமுகத்தில் வந்திறங்கிய ஆயிரத்து 115 டன் காம்ப்ளக்ஸ் உரம் சரக்கு ரயில் மூலம் திண்டுக்கல் கொண்டு வரப்பட்டது. 50 கிலோ எடையுள்ள மூடை ரூ.888 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள மொத்த விற்பனை மற்றும் சில்லரை விற்பனை உரக்கடைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை தரக்கட்டுபாடு உதவி இயக்குனர் செல்வராஜ் கூறுகையில்,

""விவசாயிகள் விலை பட்டியலில் கையெழுத்திட்டு பில்லுடன் தங்களுக்கு

தேவையான உரமூடைகளை பெற்றுக்கொள்ளலாம். அதிக விலைக்கு மூடைகள் விற்கப்பட்டால் (97894 38386) புகார் தெரிவிக்கலாம்," என்றார்.

## தானியங்கி வானிலை மையம் அமைப்பது எப்போது விவசாயிகளுக்கு விடிவு காலம் பிறக்குமா

கம்பம் : விவசாயிகளுக்கு முன்கூட்டியே தட்பவெப்ப நிலையை அறிவிக்கும், தானியங்கி வானிலை மையம் அமைக்க, விவசாயிகள் விடுத்த கோரிக்கை நிறைவேறுவது எப்போது, என்று கேள்வி எழுப்பியுள்ளனர். விவசாயம் மற்றும் தோட்டக்கலை சாகுபடியில், தட்பவெப்ப நிலை மாற்றங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. திடீர் புயல் மழை, அசாதாரண வெப்பம் போன்றவைகள் விவசாயம் மற்றும் தோட்டக்கலை பயிர்களை பாதிக்கும். முன்கூட்டியே தகவல் தெரிந்தால், அதற்கு ஏற்ப தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். மகாராஷ்டிரா மாநிலத்தில், திராட்சை சாகுபடியாளர்களுக்கு அந்த மாநில தோட்டக்கலைத்துறை, தட்பவெப்ப நிலையை முன்கூட்டியே அறிவித்து வருகிறது. இதனால் அங்குள்ள விவசாயிகளுக்கு தட்பவெப்ப நிலை மாற்றங்களால் பாதிப்புகள் ஏற்படுவதில்லை.தமிழகத்தில், தேனி மாவட்டத்தில் திராட்சை, வாழை அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் குறிப்பிட்ட சில காலங்களில், திராட்சை மற்றும் வாழை, மா போன்ற பயிர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன.
இதை தடுக்க தானியங்கி வானிலை மையங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும் அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். கோவை விவசாய பல்கலைக்கழகம் ஆய்வுகளை மேற்கொண்டது. வானிலை மையம் அமைக்கப்பட்டால், விவசாயிகளுக்கு டோல்பிரி மொபைல் எண் வழங்கப்படும். அந்த எண்ணில் தொடர்பு கொண்டால், ஒரு வாரத்திற்கு முன்கூட்டியே தட்பவெப்பநிலை மாற்றம் குறித்து தெரிவிக்கப்படும். அதற்கேற்ப இடுபொருள்களை பயன்படுத்தி, விவசாயிகள் சாகுபடி செய்யலாம். தோட்டக்கலைத்துறையினர் கூறுகையில்,"தானியங்கி வானிலை ஆய்வு

மையங்களை அமைத்தால், சாகுபடியில் பிரச்னை ஏற்படாது,' என்றனர். கோவை விவசாய பல்கலை மேற்கொண்ட முயற்சிகள் எந்த நிலையில் உள்ளன என்பது தெரியவில்லை.

எனவே தானியங்கி வானிலை மையங்கள் அமைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## வேளாண் சேமிப்பு மையம் விரைவில் வருகிறது : தானியங்களை இருப்பு வைக்க வசதி

திருவள்ளூர் : விவசாயிகளின் வசதிக்காக, 39 உலர் களங்களையும், 13 சேமிப்பு கிடங்குகளையும் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வேளாண் வணிக துறை அமைத்து வருகிறது. இவை, அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில், 84 ஆயிரம் ஹெக்டேரில் நெல்லும், 30 ஆயிரம் ஹெக்டேரில் பயறு மற்றும் எண்ணெய் வித்துக்களும் நடப்பாண்டில் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. பெரும்பாலான விவசாயிகளுக்கு விளைபொருட்களை இருப்பு வைக்க வசதி இல்லாததால், அறுவடைக்கு பின் உடனடியாக விற்பனை செய்கின்றனர். இதனால், போதுமான லாபம் கிடைப்பதில்லை.

தற்போது, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு நீர்வள,நிலவள திட்டத்தின் மூலம் பல்வேறு வசதிகள் உருவாக்கப்படுகிறன. இது குறித்து, வேளாண் வணிக துறையின், இணை இயக்குனர், லேபாகிஸ்வர் கூறுகையில், ''நடப்பாண்டில், ஒரு வேளாண் விற்பனை மையம், 13 சேகரிப்பு மையம், 39 உலர்களம் ஆகியவை அமைக்க, 2.20 கோடி ரூபாயில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றில், நெல் மற்றும் பயறு வகைகளை உலர வைத்து, இருப்பு வைத்து கொள்ளலாம். ஒரு மூட்டை நெல்லுக்கு, நாள் ஒன்றுக்கு, 10 பைசாவும்; உலர்த்துவதற்கு, நாள் ஒன்றுக்கு, 20 ரூபாயும் வசூலிக்கப்படும்,'' என்றார்.

மேலும், ''இவற்றை பராமரிக்கும் பொறுப்பு, விவசாயிகள் குழுவிடம் ஒப்படைக்-

கப்படும். இக்குழுவினர், விவசாயிகளிடம் வசூலிக்கும் கட்டணத்தைக் கொண்டு, பராமரிப்பு பணிகளை மேற்கொள்வர்,'' என்றார்.

## விவசாயிகளுக்கு மீண்டும் வங்கிக் கடன்?ஆலோசனை கூட்டம் நடத்த முடிவு

தர்மபுரி: வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, மீண்டும் வங்கிக் கடன் வழங்குவது தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடத்த, நேற்று நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில், முடிவு செய்யப்பட்டது. தர்மபுரி கலெக்டர் அலுவல வளாகத்தில், கலெக்டர் விவேகானந்தன் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், நேற்று நடந்தது.

கூட்டத்தில் நடந்த விவாதம் பின்வருமாறு: விவசாயி சுந்தரம்: பன்னிகுளத்திற்கு உட்பட்ட வி.ஏ.ஓ. மற்றும் வி.ஏ.ஓ., உதவியாளர் பணியிடம், ஆறு ஆண்டுகளாக காலியாக உள்ளது. இதனால், விவசாயிகள் வங்கி கடன் மற்றும் விவசாயத்திற்கு அரசு வழங்கும் மானியங்களை பெறமுடியாத நிலையுள்ளது. கலெக்டர் விவேகானந்தன்: தர்மபுரி மாவட்டத்திற்கு புதிதாக, 42 வி.ஏ.ஓ.க்கள் நியமணம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள், தர்மபுரி மற்றும் அரூர் தாலூகவில், காலியாக உள்ள இடங்களில் பணியமர்த்தப்படவுள்ளனர். தற்போது, வி.ஏ.ஓ., பணியிடம் காலியாக உள்ள வருவாய் கிராமங்களுக்கு அருகில் உள்ள வருவாய் கிராமத்தை சேர்ந்த வி.ஏ.ஓ.,க்கள் வாரந்தோறும் செவ்வாய் கிழமைகளில் மனு வாங்க வேண்டும்.

இதை தாசில்தார்கள் கண்காணித்து, மனு வாங்க செல்லாத வி.ஏ.ஓ.,க்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பழனிவேல் நடேசன்: தர்மபுரி மாவட்டத்தில், வனத்தை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில், வன விலங்குகள் புகுந்து பயிர்களை சேதம் செய்து வருகிறது. இதற்கு வனத்துறையினர் நிவாரணம் வழங்குவதில், கால தாமதம் ஏற்படுகிறது.

கலெக்டர் விவேகானந்தன்: விவசாயிகளுக்கு வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு தேவையான சான்றிதழ்கள் மற்றும் உதவிகள் செய்ய, வி.ஏ.ஓ.,க்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பாதிக்கப்படும் விவசாயிகள், தங்கள்

பகுதி வி.ஏ.ஓ.,க்களிடம் விண்ணப்பித்தால், அவர்கள் வனத்துறையினரிடம் இருந்து நிவாரணம் கிடைக்க தேவையான உதவிகளை செய்வார்கள்.

காந்தி: தர்மபுரி மாவட்டத்தில் வறட்சியால் கரும்பு விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அனைத்து கரும்பு விவசாயிகளும் பயிர் காப்பீட்டு செய்தும் இழப்பீடு பெற முடியாத நிலை உள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலெக்டர் விவேகானந்தன்: பயிர் காப்பீடு திட்டத்தில், தனி நபருக்கு இழப்பீடு வழங்க இயலாது என, வங்கி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், மாவட்டத்தில் பல கரும்பு விவசாயிகள் இழப்பீடு கேட்டு விண்ணப்பித்துள்ளனர். இதில் உள்ள குறைகளை அகற்ற மற்றும் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு கிடைப்பதற்காக வங்கி மேலாளர்கள் மற்றும் இன்சூரன்ஸ் அலுவலர்களை கொண்டு ஆலோசனை கூட்டம் நடத்தி தீர்வு காணலாம்.

தமிழக விவசாயி சங்க தலைவர் சின்னச்சாமி: தர்மபுரி மாவட்டத்தில், வறட்சியின் காரணமாக, டிராக்டர் லோன் வாங்கிய விவசாயிகள், தற்போது கடனை திருப்பி செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து வங்கிகள் டிராக்டர்களை ஏஜன்சிகள் மூலம் கைபற்றி வருவதை தடுக்க வேண்டும். கடன்களை திரும்ப செலுத்தும் கால அவகாசத்தை அதிகரிக்க வேண்டும்.

கலெக்டர் விவேகானந்தன்: வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு புதிய கடன் வழங்குவது மற்றும் விவசாயிகளிடம் இருந்து டிராகடர்களை ஏஜன்சி மூலம் பறிமுதல் செய்வதை தடுக்க, எனது தலைமையில் அனைத்து வங்கி மேலாளர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் பங்கேற்கும் ஆலோசனை கூட்டம், விரைவில் நடத்தப்படும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

டி.ஆர்.ஓ., ராமர், வேளாண்மைத்துறை இணை இயக்குனர் மனோகரன் உள்ளிட்ட பல்வேறு துறையை சேர்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### கி.கிரியில் கன மழை

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், போச்சம்பள்ளி, பர்கூர், மத்தூர் உள்ளிட்ட பகுதிகளில், வானம் பார்த்த பூமி அதிகமாக உள்ளது. இந்த பகுதியில்

ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக, மா மரங்கள் காய்ந்தது.

நேற்று முன்தினம் இரவு, 8 மணி முதல், 10 மணி வரை கன மழை பெய்தது. அதனால், கிருஷ்ணகிரி நகர் பகுதியில், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் கன மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். மழை இல்லாமல் சிறுதானிய பயிர்கள் வாடி வந்த நிலையில், நேற்று முன்தினம் பெய்த மழை, அந்த பயிர்களுக்கு உயிர் ஊட்டுவதாக இருந்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**31.08.2013**

**தேயிலைச் செடிகளில் கொப்புளநோய் பாதிப்பு**

வால்பாறை: வால்பாறை பகுதியில் நிலவிவரும் கால சூழ்நிலை காரணமாக தேயிலைச்செடிகளுக்கு கொப்புளநோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து உபாசி ஆராய்ச்சி நிலைய டாக்டர் பிரேம்குமார் கூறுகையில், வால்பாறை பகுதியில் தற்போது நிலவிவரும் காலநிலையில் தேயிலைச்செடிகளில் கொப்புள நோய் காணப்படுகிறது. நீர் நிலைப்பகுதிகள் அருகேயுள்ள தேயிலைத்தோட்டங்கள், வனப்பகுதிகளை அடுத்த தேயிலைத்தோட்டங்களில் கொப்புளநோய் உள்ளது. இந்த நோயால் உற்பத்தி பாதிப்பும், தேயிலை தூள் தரமில்லாததாகவும் ஆகிவிடும். எனவே இதற்கு தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விவசாயி கள் மேற்கொள்ள வேண்டும். தேயிலைத்தோட்டங்களில் களைகளை கட்டுப்படுத்த வேண்டும். நோய் தாக்கப்பட்டிருந்தால் காப்பர் ஆக்சி குளோரைடு மற்றும் ஹெக்சாகோனசோல் ஆகிய நோய் தடுப்பான்களை கலந்து 5 முதல் 7 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும் என்றார்.

**வங்கி கடனை தள்ளுபடி செய்ய விவசாயிகள் வலியுறுத்தல்**

தாராபுரம்: தாராபுரத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. வருவாய் கோட்டாட்சியர் திவாகர் தலைமை தாங்கினார். இதில் விவசாயிகள் தரப்பில் பேசியதாவது: தாராபுரம் தாலுக்காவில் தேசியமயமான வங்கிகளில் விவசாயத்திற்காக பயிர்கடன், நகைகடன், கோழிப்பண்ணை கடன் டிராக்டர் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களை விவசாயிகள் பெற்றுள்ளனர். பருவமழை மழை பெய்யாத காரணத்தால் வறட்சி ஏற்பட்டு விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

அரசே இந்த ஆண்டு வறட்சி  மாநிலமாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கி வருகிறது. இந்நிலையில் மேற்சொன்ன வங்கிகள் கடனை வசூலிப்பதாக சொல்லி விவசாயிகளை மிரட்டி வருவதோடு, ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. இதனால், மனமுடைந்த பல விவசாயிகள் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். மாவட்ட ஆட்சியர் வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி விவசாயிகளின் கடன் வசூல் நெருக்குதலை கைவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தினசரி காய்கறி மார்கெட்டில் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களை மொத்தமாக விற்பனை செய்வதற்கு தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர்கள் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து ள்ளனர். நகாராட்சி நிர்வாகம் விவசாயிகளின் நலன் கருதி உழவர்களின் உற்பத்தி பொருட்களை பாதுகாப்பாக வைத்து விற்பனை செய்வதற்கு இடம் ஒதுக்கித் தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.  அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு செப்டம்பர் மாதம் 5ம் தேதி தண்ணீர்  திறந்து விட வேண்டும்.

அறிவிக்கப்படாத மின் வெட்டால் கிணற்றுப் பாசனத்தில் சாகுபடி செய்துள்ள மக்காச்சோளம், கரும்பு, வெங்காயம் உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து வருகிறது. மின் வெட்டை குறைக்க அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்குதல்பரவி வருகிறது. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கால்நடை பராமரிப்புத்துறை உடனடியாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கொங்கூர் குளத்தில் வண்டல் மண் எடுக்கப்பட்டு வருகிறது. பொதுப் பணித்துறையின் மூலம் ஒரு டிராக்டருக்கு 30 ரூபாய் மட்டுமே வசூலிக்க வேண்டும். ஆனால் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் டிராக்டருக்கு ரூ.300 வரையில் வசூலித்து வருகின்றனர்.

இதை தடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் விவசாயிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டது. சம்பந்தபட்ட துறை அதிகாரிகளைகொண்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதாக வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்தார். வட்டாட்சியர் சிவசுப்பிரமணியன், மண்டல துணை வட்டாட்சியர் தங்கவேல், கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் காளிமுத்து, உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட தலைவர் ஈஸ்வரமூர்த்தி, விவசாயிகள்

சத்திரம் பழனிச்சாமி, முருகானந்தம், கதிர்வேல், செல்லமுத்து, செந்தில், ராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மாவட்டத்தில் பல இடங்களில் மழை**

கோவை: கோவை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று கனமழை பெய்தது. சின்னகல்லாரில் 23 மி.மீ மழையும், வால்பாறை பி.ஏ.பியில் 33 மி.மீ மழையும், வால்பாறை தாலூகாவில் 32 மி.மீ மழையும், பீளமேட்டில் 14 மி.மீ மழையும், பெரியநாயக்கன்பாளையத்தில் 5 மி.மீ மழையும், சூலூரில் 7 மி.மீ மழையும் பெய்தது. சின்கோனாவில் அதிக பட்சமாக 132 மி.மீ மழை பெய்தது. மாவட்ட அளவில் கடந்த 3 மாதத்தில் சின்கோனாவில் 3 ஆயிரம் மி.மீ அதிகமாக மழை பெய்திருக்கிறது. கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை காலத்தில் 640 மி.மீ மழை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பருவ மழை சீசன் முடியும் முன்பே 27 சதவீதம் கூடுதலாக மழை பெய்துள்ளது குறிப்பிடதக்கது.அன்னூர், கோவில்பாளையம் பகுதியில் நேற்று பலத்த மழை பெய்தது. தேசிய நெடுஞ்சாலையில் புளியமரம் சாய்ந்ததால்  இரவு 7 மணி முதல் 9.30 மணி வரை போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சரவணம்பட்டி பகுதியில் நடராஜ் என்பவரது தோட்டத்தில் தென்னை மரத்தில் இடி விழுந்தது. இதில் வீட்டின் முன்புறம் போடப்பட்டு இருந்த பந்தல் தீப்பிடித்து எரிந்தது. கணபதி தீயணைக்கும் படையினர் வந்து தீயை அணைத்தனர்.

**ரூ. 2.54 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சியை அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று விவசாயிகள் கொண்டுவந்த கொப்பரை ரூ.2.54 லட்சத்துக்கு ஏலம் போனது என அதிகாரி தெரிவித்தார். பொள்ளாச்சியை அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கொப்பரை ஏலம் நடைபெற்றது. நெகமம், காட்டம்பட்டி, ராசக்காபாளையம், சந்திராபுரம், சிறுகளந்தை உள்ளிட்ட

பகுதிகளில் இருந்து 9 விவசாயிகள் மொத்தம் 104 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர். 92 மூட்டை முதல் தர கொப்பரையாகவும், 12 மூட்டை இரண்டாம் தர கொப்பரையாகவும் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன.

முதல் தர கொப்பரை ரூ.49.75 முதல் ரு.52.50 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ரூ.42.75 முதல் ரூ.44. 85 வரை ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த 5.5 டன் கொப்பரை ரூ.2.54 லட்சத்துக்கு ஏலம்போனது. கடந்த இரண்டு மாதங்களுக்கு பிறகு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விவசாயிகள் கொண்டு வந்த கொப்பரை அளவு, இந்த வாரம் அதிகமாக இருந்துள்ளது. மேலும், ஒரு கிலோவுக்கு ரூ. 3 முதல் ரூ.4 வரை உயர்ந்துள்ளது என்று ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

**திருச்சியில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி: திருச்சியில் இன்று விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடை பெறுகிறது. திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் இன்று (30ம் தேதி) காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நடை பெறுகிறது. கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் குறித்து நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம். விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கலெக்டர் ஜெயஸ்ரீ கேட்டுக்கொண்டுள்ளார்.

**வறட்சியால் கரும்பு சாகுபடி பாதிப்பு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வழங்க விவசாயிகள் கோரிக்கை கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்**

அரியலூர்: அரிய லூர் மாவட்டம் சாத்தமங்கலம் கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிருக்கு ஏக்கருக்கு ரூ.40,000 நிவா ரணம் வழங்கிடக்கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் அரியலூர் தாலுகா அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது.கரும்பு விவசாய சங்க மாவட்ட செயலாளரும், மாநில குழு

உறுப்பினருமான மணியன் தலைமை வகித்து பேசினார்.
கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாய சங்க மாநில செய லாளர் காமராஜ் பேசுகை யில், வறட்சியின் காரண மாக கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.40,000 நிவாரணம் வழங்க வேண்டும். 3நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட கரும்பு பயிர்களை

கணக்கெடுத்து ஒரு வாரத்திற்குள் வறட்சி நிவா ரண பட்டியலை வெளியிடவேண்டும். அதன் பின் நிவாரணம் வழங்க வேண் டும் என்றார்.
அகில இந்திய விவசாய சங்க மாவட்ட துணைத்தலைவர் பிச்சைபிள்ளை பேசுகையில், மாவட்ட தலைநகரமான அரியலூரில் பாதாள சாக்கடை பணியால் சாலைகள் மிக மோசமாக உள்ளன. மாவட்ட தலைமை மருத்துவமனை, அரியலூர் அரசு மருத்துவமனை எவ்வித அடிப்படை வசதியுமின்றி ஆரம்ப சுகாதார நிலையம் போல் உள்ளது. ஒராண்டில் மாவட்டத்தில் 4 கலெக்டர்கள் மாறி விட்டனர். அமைச்சர்களை மாற்றுவது போல தமிழக அரசு, அரியலூர் மாவட்ட கலெக்டர்களை மாற்றுகிறது. குறைந்த பட்சம் பணிக்கு வரும் கலெக்டரை ஒராண்டு இருக்குமாறு செய்ய வேண்டும் என்றார். விவசாய சங்க மாவட்ட செயலாளர் செல்லதுரை, கரும்பு விவசாய சங்க மாவட்ட தலைவர் ஜெயபால், விவசாய சங்க வட்ட செயலாளர் வரபிரசாதம், கரும்பு விவசாய சங்க மாநில குழு உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர். கரும்பு விவசாயிகள் சங்க துணை தலைவர்கள் புண்ணியமூர்த்தி, நல்லதம்பி, யோகநாதன், தட்சணாமூர்த்தி, ஆரோக்கியசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கோரிக்கைகளை வலியுறுத்தி பேசிய நிர்வாகிகள், பின்னர் கலெக்டரை சந்தித்து மனு கொடுப்பதற்காக, அரியலூர் பஸ் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக கலெக்டர் அலுவலகம் சென்றனர். ஆனால் நுழைவாயில் முன் பகுதியில்

அவர்களை தடுத்து நிறுத்திய போலீ சார் அனைவரையும் அனுமதிக்க முடியாது என்றும், குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே செல்ல அனுமதிக்க முடியும் என தடுத்து நிறுத்தி விட்டனர்.
பின்னர் சங்க நிர்வாகிகள், கலெக்டர் அலுவலகத்திற்குள் சென்று, அலுவலக மேலாளர்(குற்றவியல்) அன்பழகனிடம் மனுக்களை கொடுத்தனர்.
தாசில்தார் முருகன், இன்ஸ்பெக்டர் ராஜேஸ் வரி ஆகியோர் உடனிருந்தனர்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் ஆய்வு**

திண்டுக்கல்: பெரியகோட்டை மற்றும் ம.மூ.கோவிலூர் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை வேளாண் இணை இயக்குநர் மனோகரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கணக்கெடுப்பு பணிகளை துரிதப்படுத்தி முடிக்க உத்தரவிட்டார். பண்ணை குட்டைகள் அமைக்கும் போது அதில், தண்ணீர் தேங்கி அருகிலுள்ள பயிர்களுக்கு பயனளிக்கும் வகையில் அமைக்க உத்தரவிட்டார்.
ஆய்வின் போது, திண்டுக்கல் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அருள்அரசு, வேளாண் அலுவலர்கள் சின்னச்சாமி, கிருஷ்ணகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
வேன் மோதி வாலிபர் பலி
திண்டுக்கல்: வேடசந்தூர் அருகே வேன் மோதியதில் வாலிபர் பலியானார்.
மாரம்பாடியைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன் (27). வேடசந்தூர்- வடமதுரை ரோட்டை கடக்க முயன்றபோது கேரளாவில் இருந்து வந்த வேன் இவர் மீது மோதியது.
இதில் சம்பவ இடத்திலேயே ரவிச்சந்திரன் உயிரிழந்தார். வேடசந்தூர் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

**விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் வழங்க வேண்டும்**

சிவகங்கை: மாவட்டத்தில் பயிர் இன்சூரன்ஸ் செய்த விவசாயிகளுக்கு உடனடியாக இன்சூன்ஸ் தொகை வழங்க வேண்டும் என உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.சிவகங்கையில் உழைக்கும் மக்கள் விடுதலை இயக்க மாவட்ட கூட்டம் அமைப்பாளர் சிவக்குமார் தலைமையில் நடந்தது. மாவட்டத் தலைவர் அற்புதம், இளைஞரணி அமைப்பாளர் செயராசு,

ஒன்றிய நிர்வாகிகள் சாமிநாதன், சேசு, லூாயிசு, முனியசாமி, செல்வராசு மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதில் தந்தை, மகன் நிலத்தகராறு தொடர்பாக காளையார்கோவில் போலீஸ் ஸ்டேசன் சென்ற இயக்க நிர்வாகிகள் மீது தாக்குதல் நடத்தி, பொய் வழக்குப்பதிவு செய்த காளையார்கோவில் போலீசார் மீது எஸ்பியிடம் கொடுக்கப்பட்ட புகார் அடிப்படையில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் பயிர் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் தாமதிக்காமல் இழப்பீடு வழங்க வேண்டும். மானாமதுரை அருகே பாப்பாங்குளத்தில் வீடுகள் இடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கி புதிய வீடு கட்டித்தர வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 10 லட்சம் கிலோ தேக்கம்கேரளாவுக்கு 2வது நாளாக கறிக்கோழி அனுப்புவது நிறுத்தம்



பல்லடம்: கறிக்கோழி விலை ஏற்றத்தாழ்வு காரணமாக, வரி விதிப்பில் சிக்கல் ஏற்படுவதாக கூறி, கேரள அரசு சமீபத்தில் தமிழகத்தில் இருந்து வரும் கறிக்கோழிக்கு கிலோவுக்கு ரூ.95 என ஒரே விலை (பிளாட்ரேட்) நிர்ணயித்தது. இதுதவிர, 13.5 சதவீத உள்ளூர் வரியும் அறிவித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கேரளாவுக்கு கறிக்கோழிகளை நிறுத்த பிசிசி முடிவு செய்தது. இதன்படி, நேற்று முன்தினம் முதல் கறிக்கோழி அனுப்பப்படவில்லை. கடந்த 2 நாளில் 10 லட்சம் கிலோ கறிக்கோழி தேக்கம் அடைந்து, ரூ.7.5 கோடி விற்பனை முடங்கியது.

எக்ஸ்ட்ரா தகவல்

இந்தியாவில் ஆண்டுக்கு 3,200 டன் கறிக்கோழி உற்பத்தி செய்யப்படுகிறது. தனி மனித கோழிக்கறி நுகர்வு ஆண்டுக்கு 2.32 கிலோவாக உள்ளது.

**மேட்டூர் அணை நீர் மட்டம் 113 அடியாக சரிந்தது**

மேட்டூர்: மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு தொடர்ந்து தண்ணீர் திறக்கப்படுவதால் அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. நேற்று அணையின் நீர்மட்டம் 113 அடியாக இருந்தது.

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவை விட பாசனத்திற்கு அதிகளவில் நீர் திறக்கப்படுவதால் நீர் மட்டம் சரிந்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 113.10 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 6779 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து டெல்டா மற்றும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக வினாடிக்கு 18,804 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 82.91 டிஎம்சி.

**பாசனத்திற்கு தண்ணீர் திறக்க கோரிக்கை**

தாராபுரம்: தாராபுரம் அமராவதி வடிநில கோட்ட அலுவலகத்தில், அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன சங்கங்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு செயற் பொறியாளர் தியாகராஜன் தலைமை தாங்கினார். அலங்கியம், தளவாய்பட்டிணம், தாராபுரம், கொளிஞ்சிவாடி, நஞ்சைத்தலையூர், சின்னதாராபுரம், சுண்டக்காம்பாளையம், நஞ்சைகாளகுறிச்சி, பள்ளபாளையம், செட்டிபாளையம் ஆகிய வாய்க்கால் பாசன சங்கத்தினர் கலந்து கொண்டனர். இதில் விவசாயிகள் தரப்பில் பேசியதாவது: அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்தில் உள்ள பள்ளபாளையம் மற்றும் செட்டிபாளையம் ஆகிய வாய்க்கால் பகுதியில் உள்ள கடைமடை வரையில் பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கரூர் பை-பாஸ் சாலை அருகே உள்ள 16 அடி அகலம் கொண்ட ராஜ வாய்க்கால் தற்போது வெறும் 3 அகலத்தில் இருப்பதால் அப்பகுதியில் கடை மடையில் உள்ள 10 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்கு

தண்ணீர் கிடைப்பதில்லை. இதற்கு முன்பு அமராவதி அணையில் 45 அடி தண்ணீர் இருந்த போது, அன்றைக்கு இருந்த அதிகாரிகள் நதி நீர் மேலாண்மையை சரிவர செய்ததால் அப்போது ஒரு போக சாகுபடியை சிரமமின்றி செய்துள்ளோம்.

தற்போது 82 அடி தண்ணீர் இருப்பு உள்ளது. அதிகாரிகள் தண்ணீரை வீணாக்காமல் சரியான முறையில் பாசனத்திற்கு திறந்து விட வேண்டும். பழைய ஆயக்கட்டு பாசனத்தில் நெல் சாகுபடி துவங்கிய பிறகு எந்த காரணத்தை முன்னிட்டும் வேறு எதற்கும் தண்ணீரை வீணாக திறந்து விடக்கூடாது. கடந்த ஆண்டு அவ்வாறு திறந்து விட்டதால் கரூர் மாவட்ட பகுதிகளில் அறுவடை தருணத்தில் நெல் பயிறு காய்ந்து போனது.  தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு வரும் செப்டம்பர் 5ம் தேதி முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும். என்று விவசாயிகள் தரப்பிலிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. இறுதியில் செயற்பொறியாளர் தியாகராஜன் பேசினார்.

**வங்கி கடனை தள்ளுபடி செய்ய விவசாயிகள் வலியுறுத்தல்**

தாராபுரம்: தாராபுரத்தில் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. வருவாய் கோட்டாட்சியர் திவாகர் தலைமை தாங்கினார்.
இதில் விவசாயிகள் தரப்பில் பேசியதாவது:  தாராபுரம் தாலுக்காவில் தேசியமயமான வங்கிகளில் விவசாயத்திற்காக பயிர்கடன், நகைகடன், கோழிப்பண்ணை கடன் டிராக்டர் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களை விவசாயிகள் பெற்றுள்ளனர். பருவமழை மழை பெய்யாத காரணத்தால் வறட்சி ஏற்பட்டு விவசாயிகள் சிரமப்படுகின்றனர். அரசே இந்த ஆண்டு வறட்சி மாநிலமாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கி வருகிறது. இந்நிலையில் மேற்சொன்ன வங்கிகள் கடனை வசூலிப்பதாக சொல்லி விவசாயிகளை மிரட்டி வருவதோடு, ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. இதனால், மனமுடைந்த பல விவசாயிகள் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். மாவட்ட ஆட்சியர் வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி விவசாயிகளின் கடன்

வசூல் நெருக்குதலை கைவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தினசரி காய்கறி மார்கெட்டில் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களை மொத்தமாக விற்பனை செய்வதற்கு தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர்கள் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து ள்ளனர்.

நகாராட்சி நிர்வாகம் விவசாயிகளின் நலன் கருதி உழவர்களின் உற்பத்தி பொருட்களை பாதுகாப்பாக வைத்து விற்பனை செய்வதற்கு இடம் ஒதுக்கித் தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு செப்டம்பர் மாதம் 5ம் தேதி தண்ணீர் திறந்து விட வேண்டும். அறிவிக்கப்படாத மின் வெட்டால் கிணற்றுப் பாசனத்தில் சாகுபடி செய்துள்ள மக்காச்சோளம், கரும்பு, வெங்காயம் உள்ளிட்ட பயிர்கள் காய்ந்து வருகிறது. மின் வெட்டை குறைக்க அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்குதல்பரவி வருகிறது. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கால்நடை பராமரிப்புத்துறை உடனடியாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கொங்கூர் குளத்தில் வண்டல் மண் எடுக்கப்பட்டு வருகிறது. பொதுப் பணித்துறையின் மூலம் ஒரு டிராக்டருக்கு 30 ரூபாய் மட்டுமே வசூலிக்க வேண்டும். ஆனால் ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் டிராக்டருக்கு ரூ.300 வரையில் வசூலித்து வருகின்றனர்.

இதை தடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் விவசாயிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டது. சம்பந்தபட்ட துறை அதிகாரிகளைகொண்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதாக வருவாய் கோட்டாட்சியர் தெரிவித்தார். வட்டாட்சியர் சிவசுப்பிரமணியன், மண்டல துணை வட்டாட்சியர் தங்கவேல், கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் காளிமுத்து, உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட தலைவர் ஈஸ்வரமூர்த்தி, விவசாயிகள் சத்திரம் பழனிச்சாமி, முருகானந்தம், கதிர்வேல், செல்லமுத்து, செந்தில், ராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நடமாடும் மண்மாதிரி ஆய்வு வாகனம் துவக்கம் கிராமங்களில் மண் ஆய்வு செய்து உடனடி அறிக்கை கொடுக்கலாம்**

கரூர்:நடமாடும் மண்மாதிரி ஆய்வு வாகனம் ரூ.40லட்சம் மதிப்பீட்டில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் உடனடி மண் ஆய்வு செய்து அறிக்கை கொடுக்கலாம். கரூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் வேளாண்மைத்துறை சார்பில் நடமாடும் மண்பரிசோதனை ஆய்வு வாகனம் துவக்க விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்து, மண் ஆய்வு வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இதில் கலெக்டர் ஜெயந்தி பேசியதாவது,

முதல்வரால் அறிவிக்கப்பட்ட 2ம் பசுமை புரட்சியை செயல்படுத்தும் விதமாக விவசாய உற்பத்தியை இருமடங்காக பெருக்கவும், வேளாண் பெருமக்கள் வருமானததை மும்மடங்காக அதிகரிக்கவும், தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக கரூர் மாவட்டத்தில் உள்ள 1 லட்சத்து 40 ஆயிரம் விவசாயிகள் தங்களது நிலங்களில் மண் மாதிரி எடுத்து, அதை ஆய்வு செய்து ஒருங்கிணைந்த கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு உறுதுணையாக கரூர் மாவட்டத்தில் உள்ள நடமாடும் மண்பரிசோதனை நிலையத்தை மேம்படுத்தும் விதமாக நடமாடும் மண்பரிசோதனை ஆய்வுக்கூடம் வரப்பெற்றுள்ளது.

ரூ.40 லட்சம் மதிப்பில் உள்ள இந்த நடமாடும் ஆய்வு கூடத்தில் மண்ணின் சத்துக்களை ஆய்வு செய்ய இசி மீட்டர், மண்ணில் உள்ள உப்பின் நிலையை கண்டறிதல், பிஎச் மீட்டல் மண்ணின் இயக்கநிலை அதாவது கலர், அமில நிலை கண்டறிதல், ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டரில் மண்ணில் உள்ள மணிச்சத்தை ஆய்வு செய்தல், ப்ளேம் போட்டோ மீட்டரில் சாம்பல் சத்து ஆய்வு செய்தல், கம்ப்யூட்டர் கன்ட்ரோலர் அடமிக் அப்ஸ்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோமீட்டில் நுண்ணூட்ட சத்துள்ள துத்தநாகம், இரும்பு, தாமிரம், மாங்கனீஷ் சத்துக்களை கண்டறிதல் என 5 உபகரணங்கள் இந்த நடமாடும் ஆய்வுக்கூடத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

இதுதவிர மண்ணின் சுண்ணாம்புநிலை, தழைச்சத்தை கண்டறியும் ஆய்வும்

செய்யப்படவுள்ளது. எனவே நடமாடும் மண்பரிசோதனை ஆய்வுக்கூடம் கிராமங்களுக்கு நேரடியாக சென்று விவசாயிகளின் மண்மாதிரிகளை ஆய்வு செய்து உடனடியாக மண்மாதிரி அறிக்கையை அளிக்க இயலும்.
இந்த நடமாடும் ஆய்வுக்கூடம் கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரத்திற்கும் சென்று விவசாயிகளிடம் மண்மாதிரி பெற்று உடன் ஆய்வு செய்து முடிவுகளை அறிவிக்க உள்ளது.
இதன்மூலம் கடைக்கோடி குக்கிராமங்களில் உள்ள விவசாய பெருமக்கள் அதிக தூரம் அலைச்சல் இன்றி தங்களின் மண்வளத்தை அறிந்து கொள்ளலாம்.
விவசாயிகள், வேளாண் அலுவலர்கள் ஆலோசனைகளை பெற்று மண்பரிசோதனை செய்து மண்ணின் தன்மைக்கேற்றவாறு பயிர் வகைகளை தேர்வு செய்து பயிரிட்டு அதிக லாபத்தை பெற்று பயனடைய வேண்டும். மேலும் ஆர்வமுள்ள விவசாய பெருமக்கள் ராயனூரில் உள்ள மண்பரிசோதனை நிலைய அலுவலர் 9787274211 அல்லது வெண்ணெய்மலையில் உள்ள நடமாடும் மண்பரிசோதனை நிலைய அலுவலர் 9791376728 எண்ணை தொடர்பு கொள்ளலாம்.
இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி பேசினார்.

**சம்பா சாகுபடிக்கு விதைகள் வினியோகம்**

கறம்பக்குடி: கறம்பக்குடியில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சம்பா சாகுபடிக்காக குறைந்த மானியத் தில் விநியோகம் செய்வதற்கு 26 மெட்ரிக் டன் விதைகளும், தனியார் விற் பனை நிலையங்களில் 99 மெட்ரிக் டன் விதைகளும், இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் மட்டும் விநியோகம் செய்யப்பட்டு வந்த விதைகள் தற்போது தனியார் விதை விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் வேளாண்மை விரிவாக்க மையம், தொடக்க வேளா ண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களிலும் 1 கிலோ விதை ரூ.5க்கு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட்டு வரும் இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகள் பயனடையலாம். இந்த தகவலை கறம்பக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

### மானிய விலையில் விதைநெல் கேட்டு வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகள் முற்றுகை போராட்டம்

தரங்கம்பாடி: மானிய விலையில் விதை நெல் கேட்டு அன்னப்பன்பேட்டை வேளாண் விரி வாக்க மையத்தை விவசாயிகள் முற்றுகையிட்டனர்.

மானிய விலையில் விதை நெல் வழங்கக்கோரி திருக்கடையூர் அடுத்த அன்னப்பன்பேட்டையில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தை விவசாயிகள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். பாஜ மாவட்ட விவசாய அணி செயலாளர் பிரபாகரன், ஒன்றிய செயலாளர் அகோரமூர்த்தி, தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, துணை செயலாளர் சிவராமன் மற்றும் கோவிந்தராஜ், தட்சிணாமூர்த்தி, பாஸ்கரன் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அப்போது விவசாயிகளிடம் வேளாண் உதவி அலுவலர் உதயசூரியன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதையடுத்து மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. நாகை மாவட்ட வேளாண் இயக்குனர் ராஜேந்திரன், செம்பனார்கோயில் வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் ஆகியோர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விவசாயிகளிடம் பேசினர். அப்போது வேறு பகுதிகளில் இருந்து விதைநெல் எடுத்து வந்து விவசாயிகளுக்கு தருவதாக உறுதியளித்தனர். இதைதொடர்ந்து விவசாயிகள் கலைந்து சென்றனர். இதைதொடர்ந்து பாஜ விவசாய அணி மாவட்ட செயலாளர் பிரபாகரன் கூறியதாவது: மானிய விலையில் விதைநெல் கொடுப்பதாக அரசு அறிவித்தது. ஆனால் 75 சதவீத விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைநெல் கிடைக்கவில்லை.விதைநெல் இல்லாமல் விவசாய பணி தொடர முடியாமல் தடுமாறுகின்றனர். அரசு அறிவித்துள்ள மானியத்துடன் கூடிய விதைநெல்லை அனைத்து விவசாயிகளுக்கும் பாகுபாடின்றி வழங்க வேண்டும். அதற்கு அரசும் வேளாண்மை துறையும் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றார்.

### பசுந்தேயிலை கொள்முதல் செய்ய எலக்ட்ரானிக் தராசு

மஞ்சூர்: மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கொள்முதல் செய்ய எலக்ட்ரானிக் தராசுகள் பயன் படுத்தப்படும் என இண்ட்கோ சர்வ் சேர்மன் தெரிவித்தார். நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே

உள்ள மகாலிங்கா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளார்கள். இவர்களிடம் இருந்து தினசரி கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலையை கொண்டு தொழிற்சாலை யில் தேயிலைதூள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையில் மகாலிங்கா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் அமைந்துள்ள பெரும்பாலான இயந்திரங்களும் பல ஆண்டுகள் பழமையானதால் திறன் குறைந்து காணப்படுகின்றன. இதனால் உற்பத்தி செலவினங்கள் அதிகரிப்பதுடன் விவசாயிகள் வினியோகிக்கும் பசுந்தேயிலைக்கு போதிய விலை வழங்க முடியாத நிலை உள்ளது. மேலும் சீசன் மற்றும் தேயிலை வரத்து அதிகமுள்ள சமயங்களில் விவசாய உறுப்பினர்கள் விநியோகம் செய்யும் பசுந்தேயிலையை முழுமையாக கொள்முதல் செய்ய முடியாமல் பசுந்தேயிலை கொள்முதலில் கோட்டா முறை கடைபிடிக்க வேண்டிய கட்டாய சூழல் உள்ளது. இதனால் கூட்டுறவு தொழிற்சாலையை சேர்ந்த விவசாய உறுப்பினர்களும் பாதிக்கப் படுகின்றனர்.

இதையடுத்து மகாலிங்கா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் புதிய இயந்திரங்களை அமைக்க வேண்டும் என விவசாய உறுப்பினர்கள் மற்றும் நிர்வாக தரப்பில் அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது. இந்நிலையில் தமிழக அரசின் தொழிற்சாலைகள் நவீன மயமாக்குதல் திட்டத்தின் கீழ் மகாலிங்கா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு புதிய டிரையர் இயந்திரம் அமைக்க ரூ. 39 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டது. இதை தொடர்ந்து தொழிற்சாலையில் டிரையர் அமைக்கும் பணிகள் கடந்த சில மாதங்களாக நடைப்பெற்று வந்தது. தற்போது பணிகள் அனைத்தும் முடிவடைந்ததையடுத்து புதிய டிரையரின் இயக்க விழா நேற்று நடைப்பெற்றது. விழாவிற்கு தொழிற்சாலை நிர்வாக இயக்குநர் செல்வராஜ் தலைமை தாங்கினார். மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நிர்வாக இயக்குநர் அருணாச்சலம், நிர்வாககுழு துனை தலைவர் பீமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

விழாவில் மகாலிங்கா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நிர்வாககுழு தலைவரும், குன்னுநீர் இண்ட்கோ சர்வ் சேர்மனுமான சிவக்குமார் கலந்து கொண்டு புதியதாக அமைக்கப்பட்ட டிரையர் இயந்திரத்தை இயக்கி வைத்தார்.

இதை தொடர்ந்து அவர் பேசியதாவது: தமிழக முதல்வரின் தொழிற்சாலைகள் நவீனமயமாக்குதல் திட்டத்தின் கீழ் ரூ. 39 லட்சம் மதிப்பீட்டில் மகாலிங்கா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் புதிய டிரையர் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இனி வரும் காலங்களில் விவசாய உறுப்பினர்களிடமிருந்து முழுமையாக பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படும். அதன் மூலம் உற்பத்தி அதிகரிக்க செய்வதுடன், தொழிற்சாலையின் செலவினங்களையும் கட்டுப்படுத்தி பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஊட்டி டீ விற்பனையின் மூலம் ரூ.1.33 கோடி லாபம் கிடைத்துள்ளது. இந்த லாபத்தொகை மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கும் தலா ரூ.8 லட்சம் வீதம் பகிர்ந்தளிக்கப்படும். மேலும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மூலம் விவசாய உறுப்பினர்களிடம் இருந்து தினசரி பசுந்தேயிலை கொள்முதல் செய்ய சாதாரண தராசுகள் பயன் படுத்தப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகிறது. இதையடுத்து அனைத்து கூட்டுறவு தொழிற்சாலைகளுக்கும் பசுந்தேயிலை கொள்முதல் செய்ய நவீன எலக்ட்ரானிக் தராசுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தராசுகள் மூலம் பசுந்தேயிலை எடை போட்டவுடன் அதற்குன்டான ரசீது விவசாய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்பதால் முறைகேடுகள் முற்றிலுமாக தவிர்க்கப்படும்.
இவ்வாறு சிவக்குமார் பேசினார். விழாவில் தொழிற்சாலை நிர்வாக குழு இயக்குனர்கள், விவசாய உறுப்பினர்கள், தொழிலாளர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

**விவசாயிகளுக்கு 525 டன் விதை விநியோகம் கலெக்டர் தகவல்**

தஞ்சை: சம்பா பருவத்திற்கு தேவையான சாவித்திரி, ஏடிடி&46, ஏடிடி&38, ஏடிடி&39 மற்றும் கோ (ஆர்) 50 ரக நெல் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு இதுவரை 525 டன் விதைகள் உணவு தானிய திட்டத்தின்கீழ் கிலோ ரூ.5 மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம்

செய்யப்பட்டுள்ளது என கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்தார்.

தஞ்சையில் நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் பாஸ்கரன் பேசியதாவது:

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு 2013&14ம் ஆண்டு குறுவை பருவத்தில் 28,294 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பு சம்பா பருவத்தில் இதுவரை 1,825 எக்டேரில் நாற்று விடப்பட்டு 580 எக்டேரில் நடவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 324 எக்டேரில் நேரடி நெல் விதைப்பு மூலம் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவத்திற்கு தேவையான சாவித்திரி, ஏடிடி&46, ஏடிடி&38, ஏடிடி&39 மற்றும் கோ (ஆர்) 50 ரக நெல் விதைகள் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு இதுவரை 525 டன் விதைகள் உணவு தானிய திட்டத்தின்கீழ் கிலோ ரூ.5 மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் சம்பா பருவத்திற்கு தேவையான யூரியா 5,842 டன்னும். டிஏபி 5,808 டன்னும், பொட்டாஷ் 2,752 டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 1,424 டன்னும் அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. போலி உரங்கள் மற்றும் அதிக விலைக்கு உரங்கள் விற்பதை கண்காணிக்க குழு அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 50 சதவீத மானியத்தில் பவர்வீடர் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் இத்திட்டத்தை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சம்பா சாகுபடி குறித்த ஆலோசனைகளை விவசாயிகள் பெறும் விதத்தில் ஒவ்வொரு வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திலும் வேளாண் தகவல் மற்றும் ஆலோசனை மையம் செயல்பட்டு வருகிறது. விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிகளவு சாகுபடி மேற்கொள்ள வேண்டும்.

மேலும், சம்பா பருவத்தில் நெல் சாகுபடி மேற்கொள்ளும் அனைத்து விவசாயிகளும் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்புகளில் இருந்து

பாதுகாத்துக்கொள்ள தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தவறாது காப்பீடு செய்துகொள்ள வேண்டும்.

கடன் பெறும் அனைத்து விவசாயிகள் மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.129ம், கடன் பெறாத குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.116ம் காப்பீட்டு பிரீமியமாக செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.